OS. 39/2014

**நாள். 01.03.2023.**

**வா.சா. 6 –** இராமநாதன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்ட 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை வா.சா.1 வீரபாண்டியன் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இராமநாதபுரம் மாவட்டம் வெண்ணீர்வாய்க்காலில் குடியிருக்கிறேன் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்குரிய ஆவணம் என்கைவசம் இருக்கிறது. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆதியில் முத்துவெயிலுக்கு பாத்தியம் என்று சொல்லுவார்கள். எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்துக்கள் ஆதியில் முத்துவெயிலுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் முத்து அய்யங்காருக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வெண்ணீர்வாய்க்காலில் பாத்தியமாக உள்ள சொத்துக்களின் சர்வே நம்பர் மற்றும் நான்குமால்கள் போன்ற விவரங்களை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மொத்தம் எத்தனை இலக்கம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது 5 இலக்க சொத்துக்கள் ஆகும். 1ம் இலக்க சொத்தின் விஸ்தீரணம் சரியாக தெரியாது. 1ம் இலக்க சொத்தின் பட்டா நம்பர், சர்வே நம்பர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 2ம் இலக்க சொத்தின் விஸ்தீரணம், பட்டா நம்பர், சர்வே நம்பர் எனக்கு தெரியுமா என்றால் விஸ்தீரணம் தெரியாது. பட்டா நம்பர் தெரியாது. 2ம் இலக்க சொத்திற்கு சர்வே நம்பர்.350/1ஏ, 350/1சி ஆகும். 3, 4 மற்றும் 5ம் இலக்க சொத்துக்களுக்கு விஸ்தீரணம், பட்டா நம்பர், சர்வே நம்பர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2ம் இலக்க சொத்திற்கு சர்வே நம்பர்.350/1ஏ, 350/1சி என்பது தவறு என்றால் அது சரியாக ஞாபகமில்லை. 1 முதல் 5 இலக்க சொத்துக்கள் முத்து அய்யங்காரிடமிருந்து குப்பம்மாளுக்கு ஒப்படைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் ஒத்திமீட்பு படிதான் முத்துவெயிலு சேர்வைக்கு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு நேரடியாக தெரியாது.

சொல்லிக்கொள்வார்கள். ஒத்தியை மீட்டாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. முத்துவெயிலு சேர்வை உயில் எழுதிவைத்த பத்திரத்தில் கண்ட சொத்துக்களின் சர்வே நம்பர், பட்டா நம்பர் தெரியாது. தாவா 1 முதல் 5 இலக்க சொத்துக்கள் வேலுபண்டிதருக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்துக்களை வேலுபண்டிதரின் சொத்துக்களை அவரது வாரிசுகளான பூபாலன், ராமதாஸ், வேலுதாஸ், ஜெகதீசன் ஆகியோர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அவர்கள் அனுபவம் செய்யவில்லை. வேலுபண்டிதரின் வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பூபாலன், ராமதாஸ், வேலுதாஸ், ஜெகதீசன் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதி முனியசாமிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முனியசாமி 2ம் பிரதிவாதி ராமச்சந்திரனுக்கு 1 முதல் 3 இலக்க சொத்துக்களை பொறுத்து 2003ம் வருடம் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ராமச்சந்திரன் தாவா 1ம் இலக்க சொத்தை பொறுத்து 4, 5ம் பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து 4, 5 பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 4, 5 பிரதிவாதிகள் தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்திற்கு பக்கத்தில் எனக்கு சொத்துக்கள் இல்லை என்பதால் தான் தாவா சொத்துக்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சாட்சி சொல்வதற்கு வாதி வீரபாண்டியன் வகையறா தான் நீதிமன்றத்திற்கு கூட்டிவந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.1 வீரபாண்டியன் சொன்ன விவரத்தின் அடிப்படையில் தான் நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும், வீரபாண்டியனும் உறவினர்கள் என்றால் இல்லை. நாங்கள் இருவரும் ஒரே சமுதாயத்தை சார்ந்துள்ளோம். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள தாவா சொத்து என்பது 1 இலக்கத்தை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் வெண்ணீர்வாய்க்காலில்

தான் குடியிருக்கிறேன். எனக்கு வெண்ணீர்வாய்க்காலில் சொத்துக்கள் இருக்கிறது. வெண்ணீர்வாய்க்காலில் எனக்கு சொத்துக்கள் இருக்கின்ற விவரத்தை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வெண்ணீர்வாய்க்காலில் சொத்துக்கள் இருக்கிறது என்பதை காட்ட ஆவணங்கள் போடவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் காட்டுக்கருவேல் மரங்களாக உள்ளது என்று நான் சொல்லியிருப்பது வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மரங்களை வாதிகள் தான் அவ்வப்போது வெட்டி விற்பார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்று நான் சொல்லியிருப்பது வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வீரபாண்டியன் மற்றும் அவரது சகோதரர்கள் கேசவன், ராஜேந்திரன் ஆகியோர் அனுபவத்தில் இருந்து வருவதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 2, 4, 5 பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் வெண்ணீர்வாய்க்காலில் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி என்னுடைய சமுதாயத்தை சார்ந்தவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

<u>5 முதல் 12 மற்றும் 15ம் பிரதிவாதியின் நீதிமன்ற பாதுகாவலர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்கண்ட 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.